4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 48/2017 நாள்: 29.10.2025 வா.சா.2 – கண்ணப்பன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

நானும், 1வது வாதியும் பைனான்ஸ் தொழில் செய்து வந்தோம் என்றால் சரியல்ல. நானும், 1வது வாதியும் உறவினரல்ல என்றால் சரிதான். நானும், 1வது வாதியும் எதனடிப்படையில் இறந்துபோன K.R.தினேஷ்–க்கு கடன் கொடுத்தோம் என்ற விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் முதல் விசாரணையில் 1வது வாதியின் மனைவியோடு K.R.தினேஷ் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டதாகவும், அதை ரத்து செய்துவிட்டு, மீண்டும் 1வது வாதியோடு மேற்படி K.R.தினேஷ் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதாகவும் சொல்லியுள்ள விவரத்தை வழக்குரையிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 1வது வாதி இந்த வழக்கு பிரதிவாதிக்கு எதிராக உடுமலைபேட்டை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 190/2016 வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு விசாரணைக்கு பின் கிரைய ஒப்பந்தம் கடனுக்காக ஏற்படுத்தப்பட்டது என்றும், கிரைய முன்தொகையை வட்டியுடன் திரும்ப செலுத்த வேண்டும் என்று அவ்வழக்கு பிரதிவாதிக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்துபவர். இவ்வழக்கிலுள்ள K.R.தினேஷ்–க்கு கொடுத்த தொகை சம்பந்தமான விவரத்தை என்னுடைய வருமான வரியில் தெரிவித்துள்ளேன். நான் மேற்படி வருமான வரி கணக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். K.R.தினேஷ் கடன் தொகையை என்னிடம் தான் கேட்டார், பின்பு கூடுதல் தொகை கேட்டதால்

என்னிடம் பணம் இல்லாததால் 1வது வாதியிடம் கேட்டு இருவருக்கும் சேர்த்து அடமானம் எழுதி கொடுத்தார். மேற்படி விவரத்தை வழக்குரையிலும், முதல் விசாரணை சாட்சியத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நானும், 1வது வாதியும் கூட்டாக பைனான்ஸ் தொழில் செய்து வருவதால் தான் ஒன்றாக சேர்ந்து கடன் கொடுத்து அடமானம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. நான் நூல் தரகு தொழில் செய்து வருகிறேன். என்னிடம் மட்டும் கடன் கேட்டிருந்தால் நான் மட்டும் கடன் கொடுத்து அடமான பத்திரம் எழுதி வாங்கியிருப்பேன் என்றும், ஆனால் நானும், 1வது வாதியும் சேர்ந்து பைனான்ஸ் தொழில் செய்து வருவதால் தான் சேர்ந்து அடமான கடன் பத்திரம் எழுதி வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. அடமான கடன் சம்பந்தமாக பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் ஒரு பதிலறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். மேற்படி பதிலறிவிப்பில் RKR Finance நிறுவனம் ஒரு பதிவு செய்த நிறுவனமா, அதில் வாதிகள் நாங்கள் இருவரும் பங்குதாரரா, மேற்படி பைனான்சில் K.R.தினேஷ் வாடிக்கையாளரா, மேற்படி நிறுவனம் உரிமம் பெற்ற நிறுவனமா, மேலும் எத்தனை பங்குதாரர்கள், K.R.தினேஷ் உடன் செய்து கொண்ட ஒப்பந்தம் பற்றிய ஆவணங்கள் ஆகிய கேள்விகளை கேட்டு எங்களிடம் தெரிவித்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கேள்விகளுக்கு நாங்கள் பதில் எதுவும் சொல்லவில்லை என்றால் சாட்சி பதில் அனுப்பினோம், ஆனால் மேற்படி நிதி நிறுவனம் இல்லாததால் அதற்கான பதிலை சொல்லவில்லை என்று கூறுகிறார். RKR Finance நிறுவனம் இல்லை என்றால் நாங்கள் அனுப்பிய பதிலறிவிப்பில் தெரிவித்திருப்போம் என்றால் சரியல்ல. நாங்கள் அடமான கடனை K.R.தினேஷ் உடன் ஏற்படுத்துவதற்கு முன்பாக K.R.தினேஷ் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் அதற்கு முந்தைய மூல ஆவணங்களை பார்த்தேன். செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் ஆவணத்தை பார்த்தேன், புகைப்பட நகலை பார்க்கவில்லை.

செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் ஆவணத்தை எங்களிடம் K.R.தினேஷ் தரவில்லை, அடமான பத்திரம் மட்டும் எங்களுக்கு எழுதி கொடுத்தார். K.R.தினேஷ்–ன் தந்தையான ராமலிங்க கவுண்டரிடம் நாங்கள் கடன் கொடுப்பதற்கு முன்பாக K.R.தினேஷ் கடன் கேட்பதாகவும், அதை கொடுக்கலாமா வேண்டாமா என்று நாங்கள் கேட்கவில்லை. ராமலிங்க கவுண்டர் ஒரு வழக்கறிஞர் என்ற விவரம் எனக்கு தெரியும். K.R.தினேஷ்க்கும், 2வது பிரதிவாதிக்கும் திருமணம் நடந்துள்ளதாக சொல்லியுள்ள விவரத்தை எங்களுடைய வழக்குரையில் நாங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். K.R.தினேஷ்க்கும், 2வது பிரதிவாதிக்கும் நடந்த திருமண பதிவில் சாட்சி கையொப்பம் எதுவும் நான் போடவில்லை என்றால் சரிதான். 2வது பிரதிவாதியினுடைய பான் கார்டு, ஆதார் கார்டு, திருமண பதிவு சான்றிதழ், ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அட்டை, வருமான வரி சான்றிதழ் ஆகியவற்றை 2வது பிரதிவாதி தான் எங்களிடம் தந்தார், அதை நாங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோம். 2வது பிரதிவாதி இந்த வழக்கில் முன்னிலையாகாததால் அவர் தரப்பிற்கு எதிராக ஒரு தலைபட்சமாக நீதிமன்றம் தீர்மானித்துள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி ஆவணங்களை இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்து, பொய்யாக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. K.R.தினேஷ் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு முந்தைய மூல ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நாங்கள் இந்த வழக்கில் அடமான பத்திரத்தில் உள்ள கடன் தொகையை, வட்டியுடன் பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து தான் திரும்ப செலுத்த வேண்டும் என்று பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் சரிதான். K.R.தினேஷ்–க்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்த ராமலிங்க கவுண்டருக்கு அதிகாரமே இல்லை என்றும், அது பூர்வீக சொத்து என்பதால் அதிகாரம் இல்லை என்றும், அதனடிப்படையில் நாங்கள் K.R.தினேஷிடம் அடமான பத்திரம் எழுதி வாங்கியது செல்லத்தக்கதல்ல

என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.10.29 17:52:56 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.